உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உஎ.] சுக்கிலஹு வைகாசிமீ [பகுதி—எ.
Vol. XXVII. May-June-1929. No. 7.

## தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி.

—————:(o):—————

வேற்றுமைப்பொருளைவிரிக்குங்காலை
ஈற்றுநின்றியலுந்தொகைவயிற்பிரிந்து
பல்லாறாகப்பொருள்புணர்ந்திசைக்கு
மெல்லாச்சொல்லு முரியவென்ப.

என்பது சூத்திரம். இச்சூத்திரத்திற்குச் சேனாவரையர், "வேற்றுமைத்தொகையைவிரிக்குமிடத்து, வேற்றுமையுருபேயன்றி, அன்மொழித்தொகையைவிரிப்புழி, வேறுபட்டுப் பல்லாறாக அன்மொழிப் பொருளோடு புணர்ந்துவரும் எல்லாச்சொல்லும் விரித்தற்குரிய" என்னுங் கருத்தமையப் பொருள்கூறி, "தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித்தொகைகளை விரிப்புழித் தாழ்குழலையுடையாள், பொற்றொடியையணிந்தாள், மண்ணாகிய காரணத்தானியன்றது என விரிக்கப்படும் உடைமையும், அணிதலும், இயறலும்; கருங்குழற்பேதை, பொற்றொடியரிவை, மட்குடம் என்னும் வேற்றுமைத்தொகைகளை விரிப்புழியும், கருங்குழலையுடையபேதை, பொற்றொடியையணிந்த அரிவை, மண்ணானியன்றகுடம் என வந்தவாறு கண்டுகொள்க" என உதாரணமுந் தந்து விளக்கியுள்ளார். ஏனைய வுரையாசிரியர்களும் இக்கருத்தி லுடன்பாடுடையர்களேயாம்.

அம் மூவருங் கூறும் பொருளை மறுத்துச் சிவஞானமுனிவர் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுள் வேறு உரை கூறினர். அவ்வுரை வருமாறு:—"(இத்திணிறுதிக்கட் புறனடை) காப்பினொப்பின்.........

என்றற்றொடக்கத்தவாக ஆண்டுக்கூறியபொருளேயன்றி, இன்னும் வேற்றுமைப்பொருளை விரித்துக்கூறுங்கால், அக் காப்பினொப்பின் என்றற்றொடக்கத்துத்தொகைச்சொற்களின் வேறுபட்டுப் பொருளொடு புணர்ந்திசைக்கும் எல்லாச்சொற்களும் ஈண்டுக் கோடற்குரியவென்பர் என்றவாறு. முடிக்குஞ்சொல்லைப் பொருள்என்றார், தொடர்மொழிப்பொருள் அதன்கண்ணதாகலின். காப்பினொப்பின்.......முதலியசொற்கள் புரத்தல் ஓம்புதல் நேர்தல் நிகர்தல் என்றற்றொடக்கத்துப் பொருள்புணர்ந்திசைக்குஞ்சொற்களையெல்லாம் கருத்துவகையான் உள்ளடக்கித் தொகுத்த மொழியாய்நிற்றலின் அவற்றைத் தொகையென்றும் 'அதனினியறல், அதற்றகுகிளவி' என்றற்றொடக்கத்துத்தொடர்மொழிகளின் ஈற்றுச்சொற்களே ஈண்டுக்கொள்ளப்படும்என்பது விளக்கிய 'ஈற்றினின்றியலுந் தொகை' என்றும், 'ஊரைப்பேணும்,' 'ஊரைத்தாங்கும்'என்றாற்போலப் பிறவாற்றான்வருவனவுங் காத்தற்பொருளே பயந்துநிற்றலின் அவையுந் தழுவுதற்குப் 'பல்லாறுக' என்றுங் கூறினார்" என்பதாம்.

இவ்வுரைகளுள் எவ்வுரை பொருத்தமுடையதென்பதே ஈண்டு நாம் ஆராய்வது:—

ஆசிரியர், "இன்றிலவுடையவென்னுங்கிளவியும்" என்புழிப் போலச் சொற்பற்றியோதாது "அன்மையினின்மையின்" என்புழிப் போலக் "காப்பினொப்பின்" எனப் பொருள்பற்றியோதினாராகலின், காவன்முதலிய பொருள்பற்றிவருஞ் சொல்லெல்லாங் கொள்ளப்படுமாதலின், அதற்கென வேறொருசூத்திரஞ்செய்தார் எனக் கோடல் மிகைபடக்கூறலாமாதலின் ஆசிரியர்க்கது கருத்தன்றென்பது. கருத்தாயின் "வேற்றுமைத் தொடரினீற்றுமொழி நிலைவயின்-பல்லாறுகப் பொருள் புணர்ந்திசைக்கு-மெல்லாச் சொல்லுமுரிய" என ஆசிரியர் விளங்கச் சூத்திரிப்பர்மன்; அங்ஙனஞ் சூத்திரியாமையானும் அவர்க்கது கருத்தன்று என்பது பெறப்படும். படவே முனிவருரை பொருத்தமன்றென்பதூஉம், சேனாவரையர்முதலியோருரையே பொருத்தமென்பதூஉம் பெறப்படும். சேனாவரையரும் "'காப்பினொப்பின்' எனப் பொருள்பற்றியோதினமையானே அப்பொருள்பற்றிவருவனவெல்லாங் கொள்க" எனக் கூறுதல் காண்க. அன்மைமுதலாயின தன்பொருட்கண் ஒருவாய்பாடே உடையன, காப்புமுதலாயின தன்பொருட்கண்

பல வாய்பாடுடையன. இதனைத் தொல்—சொல்—215-ம் சூத்திரத்துச் சேனாவரையருரைநோக்கி யுணர்க. இங்ஙனமே பொருள்பற்றி நன்னூலாரும், "ஆக்க லழித்த லடைத னீத்த—லொத்த லுடைமை யாதி யாகும்" எனப் பொருள்பற்றியோதிப் புறனடைகூறுமையு முணர்க.

இன்னும், முனிவர் தம்முரையுள் "வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை" என்பதற்கு, முதற்கூறியபொருள்க ளன்றி, "இன்னும் வேற்றுமைப்பொருளை விரிக்குமிடத்து" என்றுபொருளுரைத்து, ஈண்டுப் பொருளென்றது வருமொழியை என்று விரிவுரைத்துள்ளார். அங்ஙனேல் 'வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை' என்பதற்கு வேற்றுமைப் பொருளைத்தரும் வருமொழிகளை இன்னும் விரிக்குமிடத்து என்பதே பொருளாம். அங்ஙனம் பொருள்கொள்ளுங்கால், ஈற்றுநின்றியலுந் தொகைவயின்......எல்லாச்சொல்லும், காப்புமுதலாக முன்சொன்ன பொருண்மேல் வந்தனவன்றி, இன்னும் விரிக்கப்பட்ட வேற்றுமைப் பொருளைத் தரும் வருமொழிகளன்றாதலின் அவ்வுரை முன்னொடுபின் முரணுதலிற் பொருந்தாதென்பது. அற்றன்று; இன்னும் விரிக்கப்படும் மொழியென்றது ஈற்றுநின்றியலுந் தொகைமொழிகளாகிய அம்மொழி களையேயாதலிற் பொருந்தும் எனின் ஈற்றினின்றியலுந் தொகைமொழி யென்றாவது, வேற்றுமைப்பொருள் என்றாவது ஒன்றுகூறவே யமையும்; இரண்டுங்கூறவேண்டா என்பது. ஈற்றுநின்றியல்வது தொகைமொழி யென்பதை விளக்கக்கூறினாரெனின், அத்தொகையெனச் சுட்டியொழிய வே யமையும், ஈற்றுநின்றியலும் என்பது வேண்டாவாம். அன்றியும் தொகைமொழியென்பதே ஆசிரியர்க்குக்கருத்தாயின், அங்ஙனம் விளங் கக் கூறியிருப்பர்மன்; அங்ஙனங் கூறாமையானும் அவர்க்கு அது கருத் தன்றென்பது பெறப்படும். இன்னும் வேறுவேறுபொருளைக்கூறலன்றி, ஒருபொருண்மேல்வரும் பலசொல்லு மப்பொருளே தருதலின் அவற்றை விரித்தல் பயனில்கூற்றாமாதலின், அவற்றை யாசிரியர் கூறியிருப்ப ரென்பதூஉம் கொள்ளத்தக்கதொன்றன்றாம். கூறினும், யாம் முன் சொன்னவாறு "வேற்றுமைத்தொடரி னீற்றுமொழிநிலைவயின் அம் மொழிப்பொருண்மேல்வரும் எல்லாச்சொல்லும் வருதற்குரிய" என்றே கூறுவாரன்றி விரிக்குங்காலையெனவுங் கூறார். ஆதலானும் அவ்வுரை ஆசிரியர்கருத்தொடு முரணும் என்பது.

அங்ஙனேல், சேனாவரையருரைக்கண் முனிவர் நிகழ்த்திய தடைகள் பொருந்தாதெனக்காட்டியபின்னன்றோ அவ்வுரை பொருந்துமெனின், முனிவர்தடை பொருந்தாதனவாமாற்றையும் அத்தடையை முன்னர்த் தந்து பின்னர்க் காட்டுதும். முனிவர்தடை வருமாறு:—

வேற்றுமைத்தொகையைவிரிக்குங்கால் என்னுமையானும், வேற்றுமைத்தொகை விரியுமாறு வேற்றுமையியலுட் கூறவோரியைபின்மையானும், வேற்றுமையியலுள் உருபும் பொருளும் உருபுநிற்குமிடமும் மாத்திரையே கூறியொழிந்தாரன்றி, வேறொன்றுங் கூறாமையானும், வேற்றுமைத்தொகை விரியுமாறு "வேற்றுமையியல" என்பதனாற் பெறப்படுதலின் வேறுகூறவேண்டாமையானும், வேண்டுமெனின் உவமைத்தொகை விரியுமாறுங் கூறவேண்டுதலானும் அச்சூத்திரத்திற் கது பொருளன்றென்பது.

இத்தடை பொருந்தாமையை முறையே காட்டுதும்:—தொகையைப் பொருளென வாசிரியர் ஈண்டன்றி "ணகார விறுதி வல்லெழுத் தியையின்—டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே" (தொல்—புள்ளி—எ) என்றும், "னகார விறுதி வல்லெழுத் தியையிற்—றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே" (தொல்-எழுத்-புள்ளி—௩எ) என்றும், "யகார விறுதி வேற்றுமைப் பொருள்வயின், வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே" (தொல்-புள்-௬உ) என்றும், "லனவென வரூஉம் புள்ளி யிறுதி முன்......வேற்றுமை குறித்த பொருள்வயி னான" (தொல்-குற்றி-எ௰) என்றும், ஆளுதலின், தொகையைப் பொருளென்றல் பொருந்துமென்பதூஉம், தொகைவிரிப்புழி மயங்கும் மயக்கம் வருமோத்தினுற் கூறுதலின் அதற்கியைய ஈண்டுந் தொகைவிரிக்குமாறுகூறினாரெனச் சேனாவரையரே இயைபு கூறியிருத்தலினாலும், அன்றியும், வேற்றுமையியலுட்கூறியது விரியிலக்கணமேயாகலின் அதனோடியையத் தொகையிலக்கணமன்றித் தொகைவிரியுங்காற்படுமிலக்கணமுங் கூறுதலும் பொருந்துமாதலினாலும், "வேற்றுமையியல" என்பதனால் வேற்றுமைத் தொகையின் இலக்கணமுணர்த்தியதன்றித் தொகைவிரியிலக்கணங் கூறியதன்றாமாதலானும், உவமைத்தொகையை விரிக்குங்கால் வேறு சொற்பெய்து விரித்தல்வேண்டாவாகலானும் அத்தடைகள் பொருந்தாமை காண்க.

உவமைத்தொகைக்குச் சொற்பெய்துவிரித்தல் என் வேண்டா வெனின், 'பவளவாய்' என்பதை விரிக்குங்கால், பவளம்போலும்வாய் என விரிந்து பொருட்பொருத்தமுறத் தழுவி வேறுசொல்வேண்டாது உவமஉருபு முடிந்துநிற்றலின் என்பது. அற்றேல் 'பவளம்போலுஞ் சிவந்த வாய்' என ஆண்டுஞ் சொற்பெய்து விரிக்கப்படுமெனில் அற்றன்று; ஆண்டுப் பொதுத்தன்மை இதுவென வுணர்த்தற்குச் சிவந்த எனவொருசொல் விரிக்கப்பட்டதன்றி உவமவுருபும் பொருளு மியையாமையின் விரிக்கப்பட்டதன்றாகலான் அது பொருந்தாதென்பது. வேற்றுமைத்தொகையோவெனின் 'பொற்றொடியரிவை' என்றவிடத்து 'பொற்றொடியை அரிவை' என உருபுமாத்திரம் விரிக்குங்கால் வருமொழியோடியைந்து பொருள்விளக்காமையின் அதற்கு அணிந்த என ஒரு சொல் விரித்து முடிக்கவேண்டுமென்பது. இதுபற்றியே ஆசிரியர் "வேற்றுமைப்பொருளை விரிக்குங் காலை........பொருள்புணர்ந் திசைக்கும் எல்லாச்சொல்லு முரிய" வென்றார். பண்புத்தொகையில் விரிக்கப்படுவதுளதேல் அது தன்னினமுடித்தலாற் கொள்ளப்படும்.

அங்ஙனேல், அன்மொழித்தொகைபோல விரிக்கப்படுமென்றதென்னையெனின், அன்மொழித்தொகை பல்லாற்றானும் பொருள்புணர்ந் திசைக்குஞ்சொல்லானன்றி விரியாமை யாவருமுணர்ந்ததொன்றாகலின் அதனை முதற்கணெடுத்தோதி அவ்விதியை இதற்குங் கொண்டாரென்பது. அற்றேல் அன்மொழித்தொகை விரிதற்கு விதி முன்சொல்லவில்லையே யெனின் அவ்விதியையும் அநுவாதமுகத்தானே ஈண்டுக் கொள்ளவைத்தாரென்பது. இன்னோரன்ன அநுவாதத்தாற்பெறவைத்தல் பொருத்தமன்றெனின், அற்றன்று; முன்கூறப்படாததாயினும், ஆன்றோர்க்கெல்லா முடன்பாடாயதொன்றைத் தம் நூலுள் அநுவதித்துக் கூறுதலும் ஆசிரியர்க்கு வழக்காதலின் அது குற்றமாகாதென்க. ஆசிரியர்க்கு வழக்காதல், "அகரமுத னகரவிறுவாய் முப்பஃதென்ப" எனவும், "ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப" எனவும், "ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப" எனவும், 'அகரமுத னகரவிறுவாய்' 'ஓரளபு', 'ஈரளபு' என்பவற்றை அநுவாதத்தாற்பெறவைத்தலா னறியப்படும். அதனாற் பெறவைத்தல் முனிவர்க்கு முடன்பாடாதல், "அகர முதலிய முப்பதும் நெடுங்கணக்கினுட்பெறப்படுதலின் அவற்றை விரித்தோதாது முதலு மிறுதியு மெடுத்தோதி அநுவதித்தார்" என முதற்

சூத்திரவிருத்தியுட் கூறலானறியப்படும். அறுவாதமுகத்தாற்கூறு அன்மொழித்தொகையையும் விதிமுகத்தாற் கூறவமையாதோவெனின், அமையுமாயினும், விதிமுகத்தாற்கூறின் ஈண்டு அதிகரித்தபொருள் வேற்றுமைத்தொகையென்பது பெறப்படாமையான் அவ்வாறு கூறினு ரென்பது. அன்றியும், எல்லாச்சொல்லும் விரிக்கப்படுதலே வேற்று மைத்தொகையுள் எல்லாத்தொகையும் பெருமையின் அஃது அன் மொழித்தொகைக்கே நியதி என்பதுணர்த்தற்காகவும் அங்ஙனங்கூறினார் என்பது. வேற்றுமைத்தொகையுள் எல்லாம் பெருமையானன்றே ஆசிரி யர் 'உரிய' என்றார் என்பது.

ஆகலின், சேனாவரையர்கூறியவாறு அன்மொழித்தொகையையும், வேற்றுமைத்தொகையையும் விரிப்புழி வரும் வேறுபாடு இச்சூத்திரத் தாற்கூறியதென்பதே பொருத்தமாதல் தெளிக.

இனி 'வேற்றுமையியல' என்பதனால் விரியிலக்கணம் பெறுதலின் வேறுகூறல்வேண்டா வென்னும் முனிவருரையையும் ஆராய்தும்:—

முனிவர் "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" என்னுஞ் சூத்திரத்திற் குரைத்த பொருளாவது:—

வேற்றுமைத்தொகை விரியுங்கால் தொகாநிலைவேற்றுமையியல் பினவாய் விரியும்; எனவே அங்ஙனம் விரியுமியல்புடையது வேற்று மைத்தொகை என்றதாயிற்று; என்பதும், தொகாநிலைவேற்றுமையியல் பாவதென்னையெனின், கிழமைப்பொருட்கண்வந்த ஆறுவதொழிந்து ஒழிந்த உருபுகளெல்லாம் காரகப்பொருளவாகலின் வினைகொண்டன்றி முடியாமை; என்பதுமே

தொகைகள் இவையெனக் கூறி, முறையே அவற்றின் இலக்கணங் கூறுவான்புகுந்த ஆசிரியர் இவ்வாறு தொகுவது வேற்றுமைத்தொகை என அதனியல்பு உணர்த்தாது, அது விரியுமாறுகூறி அம்முகத்தானே வேற்றுமைத்தொகையி னிலக்கணமுணர்த்தினரென்றல் மலைவுகூற்று மாகலானும், தொகையிலக்கணங் கூறவறியாது ஆசிரியர் இடர்ப்பட்டுக் கூறினரெனவு மமையுமாகலானும், வேற்றுமையாய் விரியுமென்றன்றி, இயல்பாய் விரியுமென்று கூறுமாகலானும், உருபு வினைகொண்டுமுடிதலே அதற்குச் சிறப்பிலக்கணமாய்முடியுமன்றி, உருபுவிரிதல் அதற்குச் சிறப்பிலக்கணமாய்முடியாமையானும், வினைகொண்டுமுடிதல் ஆறுவதன்

கட் செல்லாமையானும், ஆசிரியர் விரிப்புழி எனவும் தொகாநிலை
வேற்றுமையெனவும் விதந்து கூறாமையானும், தொகாநிலையென்பது
தொகையே என்பதன்கண்வரும் பிரிநிலையேகாரத்தாற் பெறப்படு
மெனின், அவ்வேகாரம் "னஃகானொற்றே" என்புழியும், "அள
பெடைப்பெயரே" என்புழியும் வரு மேகாரங்கள்போல அசைநிலை
யாவதன்றிப் பிரிநிலையாகாமையானும், ஆகுமெனின், தொகைநிலை
வேற்றுமை தொகாநிலைவேற்றுமை யென வேற்றுமையின் விகற்ப
முணர்த்துவான்புகுந்தது இச்சூத்திரமாகுமன்றி, தொகையிலக்கண
முணர்த்துவான்புகுந்ததன்றாய்முடியுமாதலானும், வினைகொண்டு
முடியவிரிதலாகிய அவ்விலக்கணம் பெயரும் பெயருந்தொக்கவுவமைத்
தொகைக்கட் செல்லாமையானும், வழிநூலாசிரியராகிய நன்னூலாரும்
வேற்றுமைத்தொகையாவது ஆறுருபும் வெளிப்படவில்லது எனக்
கூறுதலினானும் அவ்வுரை வலிந்துகொண்டதொரு போலியுரையென்க.
அன்றியும், "அளபெடைப் பெயரே யளபெடை யியல" என்பது
போல "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" என மாட்டேறாகச்
சூத்திரஞ்செய்திருத்தலின், அச்சூத்திரத்திற்குப்போல இச்சூத்திரத்
திற்கும்பொருள்கோடல் பொருந்துமன்றிப் பிறவாறுபொருள்கோடலும்
பொருந்தாது. அச்சூத்திரத்திற்குப்போலப் பொருள்கொள்ளுங்கால்,
வேற்றுமைத்தொகை, தொகாநிலைவேற்றுமை விரியுமாறுபோல விரியும்
என்றே பொருள்கொள்ளவேண்டும். அங்ஙனங் கொள்ளுங்கால்,
பொதுத்தன்மையாகிய விரிதல் தொகாநிலைவேற்றுமைக்குச் செல்ல
மாட்டாதாதலின் அவ்வாறுகோடலும் பொருந்தாதென்பது. மாட்
டேற்றை வினைவிரிதலளவிற்கே கோடலாமெனின் அது தொகையிலக்
கணமன்றாதலின் அதுவும் பொருந்தாது. ஆதலானும் இச்சூத்திரத்
திற்குச் சேனாவரையர் முதலியோருரையே பொருத்தமாதல் தெளிவாம்.
ஆகவே தொகைவிரியிலக்கணம் இச்சூத்திரத்தாற் பெறப்படாமையின்
"வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை" என்னுஞ் சூத்திரத்தினால்
அதனைக் கூறினாரென்பதே பொருத்தமாதல் காண்க.

இன்னும், ஆசிரியர் தொகையிலக்கணங்கூறுங்கால் வேற்றுமைத்
தொடர்மொழியோடு மாட்டெறிதலின், உருபோடுவிரியும் மொழிகளை
யும் முன்னர்க் கூறியே மாட்டெறியவேண்டுதலினானும், ஆண்டுக்கூறுதற்
கோரிடமின்மையானும், தொகை விரியுங்காற்படு மிலக்கணமாதலினை

லும், தொடர்மொழியிலக்கணத்தோடு பொருந்த வேற்றுமையியலின் ஈற்றிலே வைத்தார் எனக் கோடலும் பொருத்தமாதல் காண்க.

இனித் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பாசிரியர் தாம் செந்தமிழ்—உகூ-ந்தொகுதியில் (பக்—ரூசo—சரு) வெளிப்படுத்திய குறிப்பினுள் வரும் இச்சூத்திரக்குறிப்பின்கண் மேலுஞ் சேனாவரையர் "இதனை 'வேற்றுமைத் தொகையே யுவமைத் தொகையே' என்னுஞ் சூத்திரத்தின்பின் வைக்கவெனின், அதுவு முறைபாயினும் இனி வருஞ் சூத்திரங்களான் வேற்றுமைத் தொகைவிரிபற்றிய மயக்கமுணர்த்துதலான் ஆண்டுப்படுமுறை யுணர்த்துதல் ஈண்டு மியைபுடைத்தென்க என்று கூறியுள்ளார். இது ஆராயத்தக்கது, என்றும், "வேற்றுமைமயங்கியலில், தொகை, தொக, தொகா என்ற சொற்கொண்ட சூத்திரங்கள் ஐந்தே; அவைகளுள், ஓம்படைக்கிளவி என்னுஞ் சூத்திரத்துள்ள தொகை என்னுஞ் சொல்லைத் தவிர மற்றைச் சூத்திரங்களிலுள்ள தொகை, தொக, தொகா என்ற சொற்கள் சமாசனைக் குறிக்கின்றனவா? அல்லவா? என்பதை அவ்வச்சூத்திரங்களுட் கூறுவோம். எவ்வாறாயினும் இவ் வைந்து சூத்திரங்களுள் ஒன்றிலாவது வேற்றுமைத் தொகையைவிரிக்குமிடத்து வேற்றுமையேயன்றி அன்மொழிப்பொருளோடுபுணர்ந்துவரும் எல்லாச்சொல்லும் உணர்த்தப்படவில்லை. ஆதலால் சிவஞானமுனிவர்கூறியபொருளே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது" என்றுங் கூறியுள்ளார்கள். அவர்கள்கூறியவாறு அச்சொற்கள் தொகைப்பொருளை யுணர்த்துகின்றனவா? அல்லவா? என்பதையும் ஈண்டு ஆராய்தும்.

(தொடரும்).

இங்ஙனம்,

சி. கணேசையர்.

ஸ்ரீ:

# குருபரம்பரை.

## எம்பெருமானார்வைபவம்.

[உகசு-ம் பக்கத் தொடர்ச்சி.]

அந்நாளினம்பெருமாளாழ்வானையழைத்தருளி
முன்னாய்ந்தவடமொழியிலொன்றுரைத்தியெனமொழிய
வென்னாவிக்குறுதுணையேயென்றிறைஞ்சியெதிர்நின்று (கூஉச)
தன்னாவுக்கிதத்ததொருசுலோகமவண்சாற்றினான்.

### வேறு.

கூறியசுலோகத்துக்குக்குறித்தநற்பொருளையெல்லாந்
தேறிநின்றுரைப்பவன்றத்திருமகள்கொழுநனைய
நாறுபூந்துழாயானன்பினயம்பெறவிருந்துகேட்டு (கூஉரு)
மாறருமாழ்வான்றன்னைமலர்க்கணாற்குளிரநோக்கி.

சிந்தனைமகிழ்ந்தேமன்பாற்செப்பியசுலோகந்தன்னா
லந்தமில்குணத்தாய்வேண்டும்பொருளெலாமறையாதின்றே
தந்தனம்யாநீவேண்டிக்கொள்ளுதிதடையாதென்றா ()
னெந்தைமற்றதுகேட்டாழ்வானெண்ணிலாப்பெருமாயன்றான்.

### வேறு.

மெய்யனல்லனொருவர்க்குமென்னமாறன்விளம்பியதிச்
செய்யகமலத்திருமகள்கோன்றன்னையதனாற்செப்பியசொ
லையமின்றிநிச்சயித்தல்வினையேற்காமோவெனவஞ்சிப் (கஉஎ)
பொய்யனேனுக்கிங்கொன்றும்வேண்டாம்புனிதவெனநின்றான்.

### வேறு.

ஆராதகாதலனுமாழ்வானீதறையவிறை
னோய்நீகேட்டபொருட்டப்பிலோநிச்சயமென்
றொருந்திருவாணைபெரும்பூதூர்த்தோன்று (கஉஅ)
மொருமெதிராசராணையவையீகின்றோம்.

### வேறு.

கேட்டுக்கொள்கவென்றுரைப்பக்கேடில்கூரத்தாழ்வானும்
வாட்டமின்றிவீழ்ந்திறைஞ்சிமலராள்கோனேயாயிலிங்கென்
கூட்டைவிடுவித்திடுகவின்றென்றுரைப்பக்குருகூர்மகிழ்மாறன் (கஉகூ)
பாட்டுக்குருகும்பிரானதனையொழிந்ததெல்லாம்புகரொன்றான்.

அதுகேட்டிறைஞ்சியாழ்வானுமாசிலரங்கத்தினிதமதரு
மதுவார்துழாயாய்திருவாணைமறுத்தாருலகிற்படும்பாட்டைப்
பொதுவாய்நோக்காய்மணந்தவிர்ந்தபூவுக்குவதோவீறென்று
னிதுவாய்ப்புறச்சொல்லுனக்கென்றெந்தைபிரிவுக்கிருந்திரங்கி. (௯௰)

ஆனாற்றந்தோமென்றுவிடைப்பரிவட்டத்தோடணிகளபந்
தேனார்துளபத்திருமாலைதிருக்கைச்சிறப்பென்றிவைநல்கிப்
போநாமன்னுமுத்தியிலென்றருளிப்புனிதன்விடைகொடுப்ப
வானோர்மகிழமண்ணிரங்கமலராள்கோனைவலஞ்செய்தே. (௯௧)

சீராழ்வான்விடைகொண்டுசிறந்தவர்ச்சாதியையிப்
பாரோர்க்கறிவித்திடுவான்போற்பத்தர்துதிப்பவலங்கரித்தன்
றோரார்திருமாளிகைதன்னிலேகாதாழ்வார்கோயில்செறிந்
தாராவன்புனினிதிருந்தானுண்டாள்கேட்டாங்கருகணைந்தாள். (௯௨)

## வேறு.

மைந்தர்களிருவர்தாமும்வந்துதந்தாதைபாதஞ்
சிந்தையுள்ளிருத்தித்தாழ்ந்தார்சிரியவெதிகனுதன்
இந்தவாறனைத்துங்கேட்டெனின்னுயிர்பிரிவதென்ன
நொந்துதன்னுணர்வையுன்னுநண்ணுணர்வுடையானேகி. (௯௩)

இருந்தவக்கோயிலெய்தியிதுவென்கொலாழ்வான்வீடுன்
பொருந்துகைக்கனிதானன்றேபோவதாங்கெற்பினன்றே
திருந்தியமுறைதானீமுன்செல்லநான்பின்னேபோத
லருந்தவமுடையாய்நோக்கிலடாததையயர்த்துளாயோ. (௯௪)

எனத்திருவுளத்திற்றுன்புற்றெதிகடந்தலைவன்கூற
மனத்தினிற்களிகூர்ந்தாழ்வான்வள்ளலேநீமுன்போயாங்
கெனக்கெதிர்கொள்ளுந்தன்மைநீதியோயானேமுன்போய்க்
கனத்தசீரன்போடுன்னையெதிர்கொள்ளக்கடவேனென்றான். (௯௫)

## வேறு.

என்றுமகிழ்ந்தாழ்வானுமிவையுரைப்பவெதிராதன்
நன்றிசெறிவைகுந்தநாட்டவரேசிமான்க
ளின்றுமுதலிங்கிருந்தார்யாவர்களுஞ்சேர்கேடர்
குன்றனையகுணத்தானைப்பிரிந்திருக்கக்கூடாதால். (௯௬)

## வேறு.

என்னமனத்தின்மிகநொந்தாங்கிருந்தபத்தர்முகநோக்கி
யுன்னவரியவெதிராதனமுதாணுழ்வானேங்கியசீர்
மன்னுமாண்டாடிருமடியில்வைத்துமுடியைமைந்தர்மடி
தன்னிற்றிருத்தாள்களைநீட்டியெதிராசற்குச்சரணமென, (௯௭)

படுத்தானாழ்வானுடையவரும்பலகால்வருந்தியுடன்றெளிந்தே
யடுத்தாங்கிருந்துதிருச்செவியிற்றயத்தையருளிவிண்ணேற
விடுத்தார்வேதவிதிப்படியேமெய்ஞ்ஞானத்தின்வேதியனை
யெடுத்தார்சாலவலங்கரித்தார்பள்ளிப்படுத்தாரிருநிலத்தில். (கூருஅ)

ஓதுந்தினங்களுலாறுகடந்தபின்னுங்குடையவரும்
போதமிக்கவாழ்வான்றன்புதல்வராயவிருவரையும்
வேதமுதல்வன்சந்நிதியிற்கொடுபோய்விட்டுவித்தகநின்
பாதஞ்சேர்ந்தவாழ்வான்றன்புதல்வரிந்தப்பாலகர்க்கு. (கூருக)

நிறைந்தவுயிரைநீகொடுத்திநிமலாநீமுன்னெனவசத்தி
லறைந்தவித்தையீங்கெல்லாமடியேனனைத்துங்கொடுக்கின்றேன்
குறைந்தநிலையிற்குறையாதாயென்னக்காட்டிக்கொடுத்தனராண்
டுறைந்துதுயிலும்பெருமானுமோங்குந்திருமாமகள்கையில். (கூசo)

காட்டிக்கொடுப்பவாங்கவளுங்காதன்மிக்கபுத்திரராய்
நாட்டிற்சனங்களறிந்துய்யநலனார்மஞ்சணீர்கொணர்ந்தாங்
கூட்டிமீளவுடையவரையுவமையில்லாயீங்கிவரைக்
கூட்டிக்கொடுபோய்ப்பலகலையுங்கொடுத்தியென்றாள்கோகநதை. (கூசக)

வேறு.

உடையவருகுநின்றவுத்தமக்குணத்தின்மிக்க
வடைவுறுமெம்பார்தம்மையாசறநோக்கியன்பா
தடையறத்தெரிசனார்த்தந்தனையிவர்க்களித்தியென்ன
விடையெனப்பணிந்துதொண்டர்தொழுதெழமீண்டுபோனார். (கூசஉ)

போனவராங்கந்தன்னிற்புரையறுதொண்டரோடும்
வானவர்கொழுந்தைவாழ்த்திச்சிலபகலிருந்துவாழ்ந்தா
ராணசீர்த்தெரிசனார்த்தமனைத்தையுமெம்பாரந்த
மானமார்மைந்தர்க்கன்றேவழங்கினார்மண்ணோருய்ய. (கூசங)

வேறு.

இந்தவகைநிகழ்நாளிற்றிருவரங்கத்தெதிமுதற்குச்
சிந்தைமகிழ்கயிங்கரியஞ்செய்துவருந்தேசிகர்க
ளந்தமில்சீர்த்திருநாமமவரவர்கட்கடுத்ததொழின்
முந்தைமறையுரைத்தபடிசெய்ததிறமொழிகின்றேன். (கூசச)

வேறு.

சீரியமுதலியாண்டான்சிறந்தமெய்ந்நடாதூராழ்வான்
கூரியகருத்தின்மிக்ககுணக்கடறனக்குநாளுங்
காரியஞ்செய்துவாழ்வர்கதமறுகூரத்தாழ்வா
னேரியல்பாடியத்துக்கிருந்துசாத்துணையாய்ப்போனான். (கூசரு)

ஆசிலாநிலைசேரெந்தையருளாளப்பெருமானந்தத்
தேசிகன்மடத்தின்மன்னூந்திருமகன்கொழுநனுய
வீசனையாராதிப்பரெழுந்தபேரன்பானுரு
மாசிலாக்கிடாம்பியாச்சான்மடைப்பள்ளிக்கவன்றன்னேடும். (௧௪௬)

வேறு.

கேதங்கடிந்தமெய்ஞ்ஞானிகிடாம்பிப்பெருமானறுசுவையோ
டோதுநாலுவிதத்தடிசிலும்பர்மகிழச்சமைத்தளிப்பர்
போதமிக்கவடுகநம்பிபுனிதற்கெண்ணெய்க்காப்பழகார்
வேதமுடிவில்வீற்றிருக்குமெய்யிற்சாத்திவியந்தெழுவான். (௧௪௭)

வேறு.

கோமடத்துச்சிறியாச்சான்கலசப்பானை
குலவுதிருவடிநிலைகள்கொண்டம்மேலோன்
போமிடத்துப்பின்செல்வன்போதமிக்க
பொருவறுஞ்சீருறங்காதவில்லிதாசர்
தாமடத்திற்கருகூலநோக்கிவாழ்வர்
தவமிக்கவம்மங்கிதக்கநீதிப்
பாமடைக்கைபணிந்தேத்தெம்பெருமானுர்க்குப்
பாலமுதுகாய்ச்சுவர்நற்பரிவானுளும். (௧௪௮)

வேறு.

ஆசிலாவெதிராசனமுதுசெயுந்தளிகையினை
மாசிலுக்கலாழ்வானுமாற்றிப்போதுநானுளுந்
தேசொடுக்கலம்மாளுஞ்சீராராலவட்டத்தா
லீசற்கினியான்றனைமகிழ்வித்திடுவானருண்மாருதியாண்டான். ()

வேறு.

கூறுந்திருமஞ்சனமெடுப்பர்குலவுமருளினெறிநின்ற
மாறென்றில்லாமாருதியுமாசில்சிறியவாண்டானுந்
தேறிமடத்துக்கமுதுபடிசிறந்தநெய்பால்கறியமுதாங்
காறுசுவைக்குமிதந்தேடியளிப்பார்காளுமளிமிக்கார். (௧௫௰)

வேறு.

இப்படிபலபலவெண்ணிறேசிகர்
தப்பறுகயிங்கரியங்கடாஞ்செய்வ
ரொப்பிலாவுடையவரேற்றமுன்னவா
செப்பினர்சிலரதிற்சிறிதுகூறுவாம். (௧௫௧)

[தொடரும்.]

உத்விப்பத்திராதிபர்.

ஸ்ரீ:

# *வள்ளுவர் சொற்சுருக்கம்,

அறிவும் ஆற்றலும் அமைந்துவிளங்கும் அக்கிராசனாதிபதியவர்கட்கும் அவையை அலங்கரிக்கும் பெரியோர்கட்கும் வணக்கம் பல.

அமிழ்தினுமினிய நம் தமிழென்னுந் தாய்க்கு அவயவமாகநிலவும் நூல் பலவற்றுள்ளும் சிரமாகச் சிறப்புற்றுவிளங்குவது, தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் ஒப்புயர்வறவோதப்பட்ட முப்பாலாகுமென்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததே. சங்கத்துச்சான்றோர்முதற் பிற்காலத்துக்கவிஞரீறாக அனைவரும் அத்தமிழ்மறையினடிகளை அடியொற்றியும், அநுகரித்துஞ் சென்றமையே அதன் பெருமையுணர்த்தும். அதுவேயுமன்றிச் சமயப்பெரியோர்களும் பிரமாண நூலாகக்கொண்டதும் அதனை வலியுறுத்தும். அவற்றிற்கு ஸ்தாலீபுலாகநியாயமாகச் சில காட்டுவல்.

'நீரின் றமையா துலகம்போலத்—தம்மின் றமையா நந்நயந்தருளி' யெனக் கபிலரும், 'நட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையு—மொட்டாரை யொட்டிக் கொளலதனின் முன்னினிதே' யெனப் பூதஞ்சேந்தனும் 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்—பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்-பொய்யில் புலவன் பொருளுரை'யெனச் சீத்தலைச்சாத்தனும், 'யாதொரு கரும மேனு மெண்ணியே துணிக வென்றுங்—காதலிற் றுணிந்து செய்தா லெண்ணுதல் கடனன் றென்று—மோது நூற் புலவர் சொன்னார்' என வில்லிபுத்தூரரும் கூறிப்போந்தனர்.

இன்னும், சைவப்பெரியாரு ளொருவராகிய உமாபதிசிவாசாரியர், 'முன்னாந், தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி, வலைப்பட்டார் மற்றை

*இது, சென்ற ஏப்பிரல்மீ 7உ மாலை திருவாளர் ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L, அவர்கள் அக்கிராசனராக வீற்றிருக்க நிகழ்ந்த மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலைமாணவர் ஞானபிவிருத்திஸபையின் வருடக்கொண்டாட்டத்தில் ஷை கலாசாலைமாணவர் ஜெ. நாராயணசுந்தரம் என்பவரால் எழுதிப் படிக்கப்பட்டது.

யவ ரென்று—நிலத்தமிழின், றெய்வப் புலமைத் திருவள்ளுவருரைத்த, மெய்வைத்த சொல்லை விரும்பாமல்' எனத் தம் நெஞ்சுவிடுதூதி லுரைத் தருளியதூஉம், 'வலையுளகப்படுத்து' என்னுந் திருவாய்மொழி வியாக்யா நத்தில் 'தலைமகள் தலையாலே வணங்கும்' என்றதற் கரும்பதவுரைசெய்த வைணவப்பெரியாரு ளொருவராகிய ஜீயர் "'தீவினை தீர்வாம்-வேண்டி னுள்தொழு தென்று விளம்புவாய்' என்று கம்பனும், 'தெய்வந் தொ ழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்று வள்ளுவனும் சொன்னதை ஸம்வாதமாகக் கண்டுகொள்வது" என்று பணித்தருளியதூஉங் காணத் தகும்.

பண்புடையாளர்தொடர்புகூறவந்து, அது 'நவிறொறு நூனயம் போலு' மென நூனயத்தை யுவமமுகத்தா னுழைத்த ஆசிரியர் தாமும் தம் நூலை நயம்படவுரைத்திருப்ப ரென்பது கூறுமையே விளக்கும். அத னுண்மை குறிக்கவே ஆசிரியர் அவ்வாறு கிளந்துசென்றார்போலும்.

அத்துணைப் பெருமைவாய்ந்தநூலு ளொன்றனையெடுத்துப்பேசு தல் எத்துணையும் ஏழையேற்கியல்வதொன்றன்றேனும், 'என்செய்கோ விதனைச்-சொல்லு வேனெனு மாசையென் சொல்வழி கேளா' என்ற வாறே, ஆசை யென்னும் பிசாசு பிடித்துந்தச் சொல்கின்றேனாதலிற் பொறுத்தருளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய நூலின்பெருமைக்குக் காரணமாயவை பலவற்றுள் ளும் அதன் சொற்சுருக்கமுமொன்றும். காலம் பொன்னினும் போற் றத்தகுவதொன்றென்ப தொருதலையாகலின் அதனைப் பயனின்றிக் கழியவிடுதல் கடனன்றென்பதை யெத்துறையிற் பயில்வோரு மொத்து மேற்கொள்வர்.

அங்ஙனமே ஸாஸ்த்ரகாரரும் 'மாத்ராலாபம் புத்ரலாபமென்று கொண்டனர். அதுபோலவே இப் பொய்யில்புலவரும், காலமாவது 'நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்-வாள்' என்றுகொண்டு, அதனை வாளா கழியவிடாமைப்பொருட்டு, எத்துணையோமாத்திரை குறைத் தெத்துணையோபுதல்வர்ப்பேற்றை யெய்தினர். 'பல சொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற - சிலசொல்ல றேற்றாத வர்' என்று பணித்த ஆசிரியர், தாமும் அவ்வாறே 'கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்க் கேளாரும்-வேட்பமொழிவது' வியப்பன்றேயாம்.

அங்ஙனஞ் சுருங்கக்கூறுதற் கவர்கொண்டநெறிகளுட் டெரிந்த வற்றைக் குறித்தகாலத்துள் இயன்றமட்டிற் கூறிச்செல்வன்.

## க. ஒன்றைச்சிறப்பித் தாற்றலால் அதன் மறுதலைக்குச் சிறப்புக்கொடுத்தல்.

'எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.'

என்பது குறள். இதனுட் செல்வருமுள்ளிட் டெல்லார்க்கும் அடக்க முடைமை நன்றென விதித்த ஆசிரியர், செல்வர்க்குச் செல்வத்தாற் பெருமையெய்து தலைநோக்காதலின் அதற் கிது தடையாகுமே யென்னுங் கடாவெழாமல் அவர்க்குப் பிறிதொருசெல்வம் தேடவேண்டா,— இதுவே மிக்கபெருமையைக்கொடுத்துச் செல்வத்தின்மேற்செல்வமாந் தகுதியுடைத்தாகலிற் செல்வத்தோடு செல்வஞ் சேர்ந்தாற்போலும் எனக் காத்து, அதனான் மற்றைக் குடிப்பிறப்பு முதலியவுடையார்க் கத்துணைச்சிறப்பின்றோ வென்னுங் கடாவெழாமல் அவர்க் காற்றலாற் சொரூபதர்மமாக்கினார். என்னை? செல்வர்க்கே செல்வந்தகைத்தென்றத னால், அவர்க் கது புறத்துறுப்பாய் உள்வழிச் சிறப்பித்து, இல்வழித் தாழ்த்தாதென்பது போதரலின் ஏனையோர்க் ககத்துறுப்பாயுள்வழி யத் துணைச்சிறப்பின்றாயினும் இல்வழித் தாழ்த்துவதென்பது பெறுதும். இதனானே யொருவன் புறத்துறுப்பிழப்பினும் அகத்துறுப்பிழப்பப் பொருளாதலின் ஏனையோர்க்குச் செல்வரினுஞ் சிறந்ததென அவர்க்குச் சொரூபதர்மமுஞ் செல்வர்க் கைச்சிகதர்மமு மாக்கியது பெரிதும் மகிழ்ச்சியைவிளைக்கின்றது?

## உ. பதசாரம்.

'மிகன்மேவன் மெய்ப்பொருள் காணா ரிகன்மேவ
லின்னா வறிவி னவர்'

என்புழி, அவர்கொள்ளா மிகலன்றி நீதிநூல்வழியொழுகுதலே வென்றி தருவதாகவும், இகலே தருவதாகக்கொள்கின்றனரே! என்பது தோன்ற மெய்ப்பொருளை 'மிகன்மேவ' லென விசேடித்தும், காணப்படும் பயத்த தாகவுங் காண்கிலரே! என்பது தோன்ற நீதிநூலை 'மெய்ப்பொரு' ளென்றும், அவ்விகலோவெனின், மெய்ப்பொருள்காணாவகை யறிவைக் கலக்கித் தன்னையே விடாது கொளச்செய்து, பின் றடக்கும் பிறர்க்கும்

இன்றியமையப்பதென்பது தோன்ற 'இகன்மேவலின்றுவறி' வென்றுங் கூறியது எத்துணையின்பம் பயக்கின்றது.

'குடியென்னுங் குன்று விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.'

இங்குத் தான் அதை விளக்கென்றன்றிக் குடியென்று கருதாமை தோன்றக் 'குடியென்னு' மென்றும், ஏனைவிளக்குப் பகலினும் எரிவதற்குச் சாதனமில்வழியும் நந்த இஃது உலகநடையுள்ளதுணையுந் தன்னுட் பிறந்தாரை விளக்கு மென்பதுதோன்றக் 'குன்றுவிளக்' கென்றும், மடியென்னுமிருள் மெல்லவரவே கெடு மென்பது தோன்ற 'மாசூர' வென்றும், ஏனையிருள்போலாது நந்தாவிளக்கையும் மாய்க்கும் அதன் வலிமைதோன்ற 'மாய்ந்துகெடு' மென்றும், பெயர்வழக்குமின்றுமென்பதுதோன்றக் 'கெடு' மென்றுஞ் சுருங்கக்கூறியது மிக மகிழ்விக்கும். இந்நுட்பமும் நயமும் அறியாதார் இஃது உலகவியற்கைக்கு மாறென்று வாதிப்பர்.

'ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.'

இதனுள், ஆறங்கமும் நிரம்பிய அரசர்களுட் டலைவனும், மூவுலகிற்கு மிறைமைபூண்டு, முக்குறும்பெறிந்தமுனிவர்கள் சிவிகைகாவ முறைசெய்யுஞ் சதமகனும் ஐந்தவித்தானாற்றற் காற்றுனாயினானென்பதுகொண்டு 'இந்திரனே' யென்றார்.

அன்றியும் 'ஏகசாக்ஷிநகர்த்தவ்யம்' என்பவாகலின் ஒரேசான்றமையாதெனின், நன்றுசொன்னாய்! அகத்தியன்சாபமெய்திநின்ற இந்திரனென்று, துருவாசன்சாபமெய்திநின்ற இந்திரனென்று, கௌதமன்சாபமெய்திநின்ற இந்திரனென்று, பலசான் றிந்திரன்மாட்டே கிடைத்தலின் வேறு பல சான்று வேண்டா வென்றவாறுமாம். இன்னும் இங்ஙனங்கூறவே, முன் பொருகாலுற்றவதன் வலிமைகண்டவன், பின்பாயினும் அஃதின்றுமைக்குத் தக்க சாதனங்களைத் தேடிக்கொளலாமன்றே! அங்ஙனமாயிருக்கவும் பின்னும் எய்திநின்றமையின் அது கூடாதென்பதும் பெறப்படும். ஆகவே, இப்பொருள்களையெல்லாம் ஒரேகாத்திலடக்கிச் சுருக்கி 'இந்திரனே' யெனக்கூறியது எவர்க்கே வியப்பொடு மகிழ்ச்சியை விளைக்காது?

'நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.'

ஈண்டு, நாம் மிக்கநுண்ணறிவுடையமாதலிற், பிறர்கருத்தறிய நமக்கு வேறு கருவிவேண்டாவெனத் தம்மைத் தாமேயும் மதிக்கு மோரெல்லையை யடைந்தோர்க்குங் கருவி கண்ணேயென்பதையடக்கிச் சுருங்கத் தன்மைபாற்கூறி, அதனால் அக்கருவி யாவர்க்குமின்றியமையா தென்பதை விளக்கிய நயம் பாராட்டற்பாலது. இவ்வாறு வருவன இன்னு மிறப்பப் பலவுள.

விரிந்தபொருளையடக்கி பொருசொல்லாற் கூறலும் அற்று. அஃ தொற்றாடற்கண்,—மறைந்தவைகூறுவாரையறிந்து, அவரயிராமற் சென்றொட்டித் தாமேகூறும்வகை யதற்கேற்ற சொல்லாக செயலாக முன்னே விளைத்து, அத்தொடர்பாற் கேட்குங்காலும் உறாதார்போன்று நின்று கேட்டல் முதலியவெல்லாமடங்க 'மறைந்தவை கேட்கவற்றாகி' யென்றும், இடுக்கணழியாமைக்கண் ஊழொன்றே பலகால்வருதலும் வேறு வேறு விராய்வருதலுமடங்க 'அடுக்கிவரினு' மென்றுங் கூறியன முதலியவற்றிற் காண்டும்.

தொனியர்த்தம்படக்கூறலும் அற்றாம்.

'மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்.'

இதனுள், மடியுளாண் மாமுகடி யென்பதற்கு, வறுமைபொருவன் மடியான்வருமென்பதும், மடியிலான்றாளுளாள் தாமரையினா ளென்ப தற்கு, ஆக்கம் மடியிலான் முயற்சியான் வருமென்பதும் கருதியபொரு ளாயினும், முன்னதற்குத் தள்ளினும்போகாத செல்வக்குழவிபோல, அங் முகடி மடியுளான் மடியிலேறியுட்கார்ந்துகொள்ளுவளென்பதும், அவ் வனமாகவே அவன் உடையுமிலனா மென்பதும், பின்னதற்கு மடியி லான்றாளைப்பற்றித் தான் சிறப்பெய்தநிற்பள் சீதேவியென்பதும், அங் ஙனமாகவே யவன் சென்றவிடமெல்லாஞ் செல்வம்பெருகுமென்பதுந் தொனித்தல் காண்க.

௩. சொன்மாற்று.

1. பொருளுவமைக்கண் அடைமாற்று:—

'சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.'

இதில் உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணுஞ் சென்றியைந்தன. சமன்செய்து சீர்தூக்கி யமைந் தொருபாற்கோடாத கோல்போற் சமன்செய்து சீர்தூக்கி யமைந் தொருபாற்கோடாமை சான்றோர்க்கணி யென்றவாறு. இவ்வாறே முன்னர்வருபவற்றிற்குங் கூட்டியுரைக்க.

2. இரண்டுபக்கத்துண் மறுதலைமாற்று:—

'கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது'.

ஈண்டுக் கானமுயலென்றதனால் யானைக்கு வெள்ளிடைநின்ற வென்பதூஉம், பிழைத்தவென்றதனாற் பிழைபாமலென்பதூஉம், முயற்குத் தக எய்த வென்றதனால் யானைக்குத்தக எறிந்தவென்பதூஉம் வருவித்துக் கூட்டியுரைக்கப்படும்.

3. உள்ளது மில்லதுமான மாற்று:—

'பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்'

என்புழி உளதாகிய அஞ்சாமையைச் சாவாரென்பதனோடுங்கூட்டி, அதனால் அஞ்சாது சொல்வாரெனச் சாவாரென்பதற்கேற்ப, இலதாகிய சொல்வாரென்பது வருவிக்கப்படும்.

4. அடையும் அடைகொளியுமான மாற்று:—இதற்கு மேற்கூறிய தே காட்டாகும். இவ்வாறு கூறுவனவெல்லா மிரண்டிடத்தும் விரிப்பிற் சொற்பல்குமென்பது பற்றியேயாம். இவை போல்வன இன்னுமுளவே லவையுமறிந் தீண் டடக்கிக்கொள்க.

ச. அவாய்நிலையாற்பெறவைத்தல்.

1. 'உளபோன் முகத்தெவன் செய்யு' மென்புழி யுளபோற்றோன்ற லல்லது என்பது அவாய்நிலையாற் கொள்ளவைத்தார்.

2. ஒன்றற் கவாய்நிலையாற்கூறி அதனான் மற்றொன்றற் கேற்பன பெறவைத்தலுமது. உதாரணமாக,

'இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.'

என்புழி உவமையில் இயங்குவார்க் கென்னு மடையை யவாய்நிலையாற் கூறிப் பொருளிற் 'காவற்சாகாடுகைப்பார்க்' கென்னும் அடையும் வருவிப்ப வைத்தார்.

3. ஏற்புடைய சொற்கள் வருவிப்ப வைத்தலு மற்று. 'இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த—வகுத்தலு' மென்புழிச் செல்வமென்னுஞ் செயப்படுபொருளும், 'இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர்' என்புழி நட்டாரென்னு மெழுவாயும் வருவிக்கப்படும். இதனாற் சொல்லெச்சங் குறிப்பெச்சங்களெல்லா மடக்கிக்கொள்க.

4. ஏற்பன வருவித்து வாக்கியமாக்கிக்கொள்ளும்படி சிலசொற் களைமட்டுஞ் சொல்லியொழிதலு மது, என்னை ?

'நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.'

என்புழி 'அந்நலம் யாநலத்துள்ளதூஉ மன்று' என்பது ஏது வாக்கியமாக, 'நாநலமென்னு நலனுடைமை' யென்பது வாக்கியமாகாது தனித்து நிற்றலால், 'அஃ தமைச்சர்க் கின்றியமையாக்குணமாவ' தென்பது வருவித் ததனோடுசேர்த்து வாக்கியமாக முடிக்கப்படுமாறு காண்க.

5. அதிகாரத்தாற்பெறவைத்தொழிதலு மற்றும். அது 'எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும் வல்லறிதல்' என்றவிடத்து ஒற்றுனென்பது பெறவைத்தாற்போன்ற இடங்களிற் காண்டும். இவையுஞ் சுருங்குதற்குக் கொண்ட நெறியாம்.

ரு. ஒரு பொதுச்சொல்லா லிரண்டுபேக்கங்களைத் தழுவல்.

'மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து'

ஈண்டுச் சகடத்திற் கேற்ற அளற்றுநில முதலியவும், வினைக்கேற்ற இடையூறுகளும் 'மடுத்தவா' யென்னு மொரு பொதுச்சொல்லாற் குறிக்கப்பட்டன.

௬. சுருக்கமான பெயரீடு.

'வினைத்திட்ப மென்ப தொருவன் மனடத்திட்ப' மென்ற வாசிரியர், அம்மனத்திட்பம் வினைக்குத் திட்பமாகலி னவ்வினையையுங் குறிக்க வேண்டுதலானும், வினைக்குத் திட்பமாகும் ஒழிந்த படைமுதலியவற்

றின் றிட்பங்களையுந் தழுவவேண்டுதலானும், முதனூலோர் வினைத் தூய்மையையும் வினைத்திட்பத்துளடக்கியது தமக்கும் உடம்பாடாதலின் அதன் றிட்பத்தையும் அடக்கவேண்டுதலானும் மனத்திட்பமென்னுது வினையினது திட்பமென்பதும்,வினைசெய்தற்கண் மனத்தது திட்பமென்பதும் அடங்க வினைத்திட்பமெனப் பெயரிட்டொழிந்தது வியந்து நோக்கத்தகும்.

எ. காரண காரியங்களுள் ஒன்றுபெற வொன்றுசொல்லி யொழிதல்.

'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.'

என்புழித், தாம் மன்னுதற் கேதுவாய வொளியை மன்னும் மன்னுதெனவே, தாமன்னுவர், மன்னு ரென்பதும்,

'இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.'

என்புழிக் காரியமாய திருச்சிறுகுதலைக் கூறவே, காரணமாய, தன் கோபத்தால் அமைச்சர் வெரீஇநீங்கத் தன்பிழைப்புத் தீருமாறும் தன் பாரம் இனிதுய்க்குமாறும் இலனுமென்பதும்பெற வொன்றுகூறி யொழிந்தமை காண்க.

இன்னும், உலகின்கண் அண்மைக்கண் நன்மைபயப்பன சேய்மைக் கட் டீமைபயப்பனவாகவும் அங்ஙனமே தீமைபயப்பன நன்மைபயப்பனவாகவும் இருத்தலின் சேய்மைக்கணுள்ளவற்றைக் கவராத பார்வைகுன்றிய கண்போன்ற பேதைமை 'முடிவு மிடையூறும் முற்றியாங் கெய்தும் படுபயனும்' பார்க்கலாற்றாது அண்மைக்கணுள்ளவற்றையே கண்டு அவற்றுள் நன்மையைக்கொண்டு தீமையை அகற்றி அதனாற் சேய்மைக் கட் டீமையெய்தி நன்மையிழக்குமென்பது கொண்டு,

'பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்'

என்று முடிபுமட்டும் கூறியொழிந்தமையும் காண்க.

காரண காரியங்களுள் ஒன்றை யொன்றி லடக்குதலும் அற்று. அது,

'விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்'

என்றவிடத்துச் சோர்தலாய காரணஞ் சொல்லுதலாய காரியத்தை யடக்கிநின்றதும்,

'மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்'

என்றவிடத்துச் சொல்லென்பது தன்காரணமாய நிகழ்த்துதலையடக்கி நின்றதும் முதலியவற்று னறிதும்.

பரம்பராகாரணங் கூறியொழிதலும் அற்றும்.

'ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.'

என்புழி, மழைக்கு வேள்விவேண்டும், வேள்விக்கு அவிசு வேண்டும், அவிசுக்கு ஆபயன் வேண்டுமாகலின் அவ்வாபயனிலதாகவே அவையாவு மிலவாமென்பதுகொண்டு 'ஆபயன்குன்று' மென்றும்,

'கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை'

என்புழிக் கல்லாரைப் பகுதியாகக்கூட்டவே, யவர்தானெறிகெடவொழு கற்குத் துணையாவர், ஆகவே முன்னினும் மிக்கொழுகுவன், ஒழுகவே யிருமையுங் கெடுவ னென்பதுகொண்டு 'கல்லார்ப்பிணிக்கு' மென்றும் 'தொகச்சொல்லித் தூவாதநீக்கி' யென விதித்த வாசிரியர், தாமுந் தொகச்சொல்லிப்போந்தனர்.

இன்னும், காரணகாரியங்களுள் 'மக்கள்மெய் தீண்ட லுடற் கின்ப,' மென்றாற்போல வொன்றை யொன்றி லேற்றுதலும், 'நன்னய மென்னுஞ் செருக்' கென்றாற்போல, வொன்றை யொன்றாக வுபசரித்த லும், ஆண்டுச் 'செருக்' கென்றாற்போல வொன்றை யொன்றாக்குதலும் அன்ன. இதனல், 'அருமறை சோரு மறிவிலா' னென்றாற்போல இடத்துநிகழ்பொருளின்றொழிலை யிடத்தின்மேலும், 'வெல்வதா' னென்றாற்போல வுடையவர்தொழிலை யுடைமைமேலு மேற்றுதலும், 'மடிமை குடிமைக்கட் டங்கி' னென்றாற்போலக் குணகுணிகளுள் ஒன்றையொன்றாக்குதலும் முதலியவெல்லா மடக்கிக்கொள்க.

அ. அதிகமாக வலியுறுத்தவேண்டிற் பிறிதோரதிகாரத்தில் உவமமுகத்தா னுழைத்தல்.

விருந்தோம்பலை வலியுறுத்தவேண்டிய ஆசிரியர், ஓரதிகாரத்தா னமையாது 'பொறையுடைமை' யென்னு மதிகாரத்தி லெடுத்துக்காட் டுவமையாக,

'இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.'

என்று நுழைத்துச்சென்றமை காண்க.

அதன்மேலும் அவ்வுவமையின் முடிபைப் பொருட்குமேற்றலும் அற்று. அது,

'அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.'

என்னுங் குறளிற் காண்டும். இதனுள் 'அழுக்காறுமை'யிற் 'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ—முண்பதூஉ மின்றிக் கெடு' மென்றதனுற் சுற்றமுங் கெடுதற்கேதுவா மென்ற வழுக்காறுடையானை யுவமித்து, அதனு லொழுக்கமிலான்சுற்றத்திற்கும் உயர்வில்லையென்பது பெறவைத்த நுட்பம் வியக்கத்தக்கது.

சூ. அணிவகையான் நயம்படவுரைத்தல்.

1. விலக்கணி:—அஃதாவது பலபொருள்களையுங்கூறி, யவற்று ளொன்று சிறப்புடைத்தென்பார், மற்றவற்றை விலக்கி யணிபடவுரைப்பது. உதாரணமாக நகுதற்பொருட்டும், மிகுதிக்கண் மேற்சென்றிடித் தற்பொருட்டும், செய்யப்படுவதாய நட்பிரண்டினுண், மிகுதிக்கண் மேற் சென்றிடித்தற்பொருட்டுச் செய்வது சிறந்ததென்றுசொல்லவேண்டிய வர், நகுதற்பொருட்டன்றெண அதைவிலக்கியவர்போன்றுகூறி, மிகுதிக் கண் மேற்சென்றிடித்தற்பொருட்டென அதைபெடுத்துச் சுருங்க வுரைத் தனர். இதனுனே யதுவு நட்பெனப்படுதே கருத்து.

2. ஏகதேசவுருவகம்:—இன்னும் ஆசிரியர் உருவகத்தையாளு மிடமெல்லாம் ஏகதேசவுருவகமேயாடலும் சொற்சுருங்குதற்கேயாம்.

3. பிறிதுமொழிதல்:— அரசர் பகைவரினும் மிக்க மெய்வலியும் கருவிச்சிறப்புமுடையாராயினும், ஊக்கமிலராயின் அஃதுடையவரசர்க் கஞ்சுவர்; அஃதெதுபோலுமெனின், யானை யேனைவிலங்குகளினும் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்புமுடைத்தாயினும் ஊக்கமின்மையின் அஃதுடைய புலிக்கஞ்சுமதுபோலுமென விளக்கவேண்டியவர்,

'பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.'

எனப் பிறிதுமொழிதலாகக் கூறி, அதனுற் கூறவேண்டியபொருளைப் பெறவைத்ததூஉஞ் சுருங்குதற் கோர்நெறியாம்.

### க0. சிறந்ததைக்கூறி யேனையவற்றையடக்கல்.

இதற்கு,

'இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.'

என்பது காட்டாகும். எல்லை? தன்னட்டார் சுற்றத்தா ரிவர் துயரையு நீக்கி, யவர்க் கேமஞ்செய்வனெனவே, தன்றுயர்நீக்கித் தனக்கேமஞ் செய்தலும் அடங்கிற்றாகலின். இது சிறப்புப்பொருளில்வரும் ஓகார வும்மைகள்போல, வுயர்ந்தவற்றுட் சிறந்ததைக்கூறி யேனையவற்றை யடக்கலும், இழிந்தவற்றுட் சிறந்ததைக்கூறி யேனையவற்றை யடக்கலு மென விருவகைப்படும்.

### கக. வேண்டியபொருளை யோர் மிகையாற் றழுவல்.

'ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்' என்புழித் தீச்சொல்லறியாமையா கியசிறப்புணரவும், 'இறந்தார்வாயின்றாச்சொல்' என்புழி நற்சொல்லறி யாமையாகியவிழிபுணரவும் ஈரிடத்தும் வாயென வேண்டாதகூறி, விரிந்த பொருளைத்தழுவியதும் ஓர் சுருக்கமாம்.

### க௨. குறைந்தசொற்களையாடல்.

'அறிகொன் றறியா னெனினு' மென்புழி யறிவென்பார் அறி யென்றும், 'அழிவந்த செய்யினு' மென்புழி யழிவென்பார் அழி யென்றும் முதனிலைத்தொழிற்பெயராற் கூறியதும், மற்றும் அத் தன்மையவுஞ் சுருக்கத்திற்குக் கொண்டனவாம்.

### க௩. பொதுச்சொல்லைச் சிறப்பில் வழங்குதல்.

உதாரணமாக: உறுவதென்னும் பொருடருவதாம் ஊறென்னும் பொதுச்சொல், 'ஊறொரா லுற்றபி னொல்காமை' யென்புழிப் பழுதா யுறுவதன்மேலும், 'வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க—ணூறெய்தி' யென்புழி நன்மையாயுறுவதன்மேலும் நின்றவாறு காண்க. இவ்வாறன்றி, யடைகொடுத்துச் சிறப்பாக்கிற் சற்று விரியுமென்க.

இன்னும்,

'இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்பம்
முழத்தொறூஉங் காதற் றுயிர்'

என்புழிப்போல மிக வலியுறுத்தவேண்டின் வர்ணியத்தை அவர்ணிய மாக்குதலும்,

'இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்'

என்புழிப்போல உவமைகளான் விளக்கிக்கூறவேண்டிய இரண்டையுமே வர்ணியாவர்ணியமாக்கி விளக்குதலும்,

'குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து'

என்புழிப்போல விரிந்தபொருளையுட்கொண்டதோ ருவமச்சொல்லால் விளக்குதலும்,

'பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

என்புழிப்போலக் கதைகளை யடக்கி விரித்துக்கொள்ளுமாறு கூறுதலும்,

'மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று'

என்புழிப்போல வருவதுநோக்கி வாளாபோதலும், அவ்வாறே வந்தது நோக்கி வாளாபோதலும்,

'ஆற்று பவர்க்கு மாண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்'

என்புழிப்போலச்சிறப்புடைப்பொருளைமுற்படக்கிளந்து பொருளடக்குதலும் முதலாக ஆசிரியர் சொல்லின்சுருக்கம் இன்னும் இறப்பப் பல விருப்பினும் அவையெல்லாம் என்னறிவின்சுருக்கத்தானும், காலத்தின் சுருக்கத்தானும் கூறவியலாமைநோக்கி யிம்மட்டில் விடுக்கின்றேன்.

ஆனல் இங்ஙனஞ் சுருக்கக்கூறுநெறியை மேற்கொண்டாராயினும், ஆசிரியர் விரிக்கவேண்டுமிடங்களில் விரிப்பிற் றவறினாருமில்லை. அது 'அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்—புல்லார் புரளவி விடல்' என்புழிப் புல்லாரென்றும் புரளவிடலென்றுங் கூறினாற்போல வலியுறுத்துமிடங்களினும், நியமஞ்செய்யுமிடங்களினும், அநுவதிக்குமிடங்களினும், 'உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை' யென்புழித் தந்திரத்தால் வெல்வதை நீக்கப் போரிலஞ்சாதுவெல்படையென்பான் அஞ்சாவென்றுங் கூறினாற்போலக் கூறுதலின்றியமையாவிடங்களினுங் காணலாம்.

ஜெ. நாராயணசுந்தரம்.

# தொண்டைநாடு.

சென்னையையும் அதனைச்சார்ந்ததான செங்கற்பட்டு முதலான ஜில்லாக்களையும் தொண்டைநாடென்பர் தமிழ்மொழிப் பயிற்சியுடையார். சேர சோழ பாண்டியரே தொன்றுதொட்டுவந்த தமிழ்க்குடிகளென்றும்[1] அவராண்ட நாடே தமிழ்நாடென்றும் பழந்தமிழ் நூல்களிற் காணப்படும். இத்தமிழ்நாட்டின் எல்லை, வடக்கில் வேங்கடமலையென்றும் மற்றைய கிழக்கு, தெற்கு, மேற்குப் பக்கங்களிற் கடலென்றும் சொல்லப்படும். ஆயினும், இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தைத் தமிழரசர்களான சேர சோழ பாண்டியர் அக்காலத்தில் எவ்வாறு பகுத்துக் கொண்டு ஆண்டனர் என்று சொல்லப் போதிய ஆதாரங்கள் கிடையா.

பின்னொருகாலத்திலே தமிழகம் பதின்மூன்றுநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தமிழ்ச்சங்கங்கள் இருந்ததாகச் சொல்லப்படும் மதுரையையும் அதனைச் சார்ந்த நாட்டினையும் செந்தமிழ்நாடென்றும், அதனைச் சார்ந்த தென்பாண்டி, குட்டம், குடம், வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலையமானாடு, புனனாடு எனப் பன்னிரண்டனையும் கொடுந்தமிழ்நாடென்றும்[2] கூறுவர்.

பாண்டிநாட்டிற்குத் தெற்கிலுள்ளது தென்பாண்டிநாடு. திருவநந்தபுரம் கோட்டையம் கொல்லம் இவைகளைக் குட்டநாடென்றும் கூறுவர். குட்டநாட்டிற்கும் தென்பாண்டிக்கும் நடுவணுற்றநாட்டை வேணாடு[3] என்பர். இந்நாட்டு மலைப்பகுதிகளில் மூங்கில் மிகுதியாகையால் இப்பெயர்பெற்றதுபோலு மென்பர் வே. கனகசபைப்பிள்ளையவர்கள்[4]. குட்டநாட்டிற்கு வடக்கிலுள்ளபகுதியைக் குடநாடென்பர். இதுவே குடகுப்பிரதேசம்போலும். பொன்னாணித்தாலுக்காவிலுள்ள

---

[1] திருக்குறள் 955 பரிமேலழகருரை.

[2] "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சே
ரேதமில்சீர்ப் பன்னிருநாட் டெண்"

(நன்னூல், 272 மயிலை உரை)

[3] வேணாட்டரசைச்சேணாட்டொழுக்கு S. I. I. iii. p. 54,

[4] The Tamils 1800 years ago, p. 15.

ஒருப்குதியைப் பூழிநாடென்பர்[5]. தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடமலையையடுத்துள்ள நாட்டினரை வடுகரென்பர்[6]. அவர்கள் தம்மையடுத்துள்ளநாட்டினரை அரவரென்பர். அவர்கள் பேசும் மொழியை அரவம் என்றும் சொல்லுவர். இதனாலே அருவரென்பார், வடவேங்கடத்தையொட்டித் தமிழ்நாட்டின் வடபகுதியில் வாழ்ந்தவராவர் என்று கூறலாம்[7]. ஆகவே இந்நாடு வடபாகத்திலுள்ளதென்பதும் இந்நாட்டினரை அருவரென்றும், அருவாளர்[8] என்றும்கூறுவர் என்பதும் விளங்கும். இவர்நாட்டுக்கு வடகிழக்கிலுள்ள நிலப்பரப்பை அருவா வடதலையென்பர். சீதம் என்பது குளிர்ச்சியைக்குறிக்கும் என்றும் தற்போது நீலகிரிப்பிரதேசம் குளிருடையதாகையால் அதுவே குளிர் நாடாகுமெனவும் கூறுவர். கோயம்புத்தூர்ஜில்லாவின்பகுதியான நீலகிரி முதலியவையே சீதநாடென்பாருமுண்டு[9]. கடையெழுவள்ளல்களிலொருவனான மலையன் வாழ்ந்த நாட்டை மலயமானாடு, மலாடு என வழங்குவர். இது கோவல் என்னும் திருக்கோவலூரை யடுத்துள்ள பிரதேசம். காவிரிப்புனலால் நிறைந்து வளப்பம்பெறும் நாட்டைப் புனல்நாடென்பர். இது திருச்சிராப்பள்ளி, தஞ்சை, சிதம்பரம் முதலிய இடங்கள்சேர்ந்த நாடாகும். கற்கா, பன்றி நாடுகளின் எல்லையறிவதற்குப் போதிய சாதனங்கள் கிடைத்தில. ஆயினும் இக்காலத்தில் அவரவர் மனம்போனவாறு கூறுவர்[10].

---

[5] Poolinad was known as Polnad till the latter part of the 18th century. This covered the 22 amsams of the modern taluka of Ponnani. *Malabar manual Vol. I p. 647 & 666.* பூழி, மணல் என்று பொருள்கொண்டு இது அகலப்புழைமுதல் பொன்னுணியாறுவரை பரவியிருந்ததென்பர் வே. க. p. 15.

[6] வடக்கிலிருந்து வந்ததால் வடகர் என்றும் அந்தச்சொல் நாளாவட்டத்தில் 'வடுகர்'என ஆயிற்றெனவும் சரித்திரப்போதகாசிரியர் அரங்காசாரியர் கூறுவர். Geo journal iii. No. 2.

[7] இதே அபிப்பிராயம்கொள்வர் மொழியாராய்ச்சியாளரான டாக்டர் ஸுநீதிகுமாரசாட்டர்ஜி.

[8] பட்டினப்பாலை, 275.

[9] The Tamils 1800 years ago p. 27. இதற்கு இவர் ஆதாரமொன்றும் கூறவில்லை.

[10] கற்காவென்றால் கல்லையுடைய நிலமென்றும், சீதநாட்டிற்கும் குடநாட்டிற்கும் நடுவேயுள்ளநாடு மலையடர்ந்தநாடாகையால் அதுவே கற்காநாடென்றும், இன்னும் திருவனந்தபுரத்தையடுத்துள்ள ஒருபகுதியைக் கக்காநாடென வழங்குவரென்றும் எழுதுவர் வே. கனகசபைப்பிள்ளையவர்கள் பக். 30. மேலும், ஸ்ரீநிவாசப்பிள்ளையும் கனகசபைப்பிள்ளை எழுதியவற்றை யொட்டியே தமிழவரலாறு எழுதிவர், பன்றிநாடென்பது தாலமிகூறும் பாதவர்

உரையாசிரியரென்ற பெரியார் தொல்காப்பியச்சொல்லதிகாரம் 394-ம் சூத்திர உரையிலே பொதுங்கர்நாடு, தென்பாண்டிநாடு, ஒளிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவா, அருவாவடதலை என்பன தமிழ்நாடுகளெனக் கூறுவர். இவரையொட்டியே இளம்பூரணஅடிகளும் 400-ம் சூத்திர உரையிற் கூறுவாராயினும், அவர் பொதுங்கர்நாட்டைப் பொங்கர்நாடென்பர். இவற்றோடு மற்றொரு முக்கியசெய்தியும் கூறுவர். அதாவது இந்நாடுகளைச் செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பால்முதலாக வடகீழ்பாலிறுதியாகக் கொள்க என்பதாம். செந்தமிழ்நாடென்பது வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமான எல்லைகட்குட்பட்ட நாடு என்று கொண்டாலும், குடநாடு குட்டநாடுகள் பழையநாடுகளாகவே யிருக்கும். அவற்றையடுத்துப் பன்றி கற்காநாடுகளும், சீதம் பூழி நாடுகளும் இருக்கவேண்டும். மலைநாடு மலாடாகவே, அருவாநாடு, திருவேங்கடமலையை வடவெல்லையாகவும் தென்பெண்ணையாற்றைத் தெற்கெல்லையாகவும் கொண்டதென்றும், அருவாவடதலை அதன் வடகீழ்பாலுள்ளதென்றும் கொள்ளலாம். இஃதெவ்வாறாயினும், ஒரு காலத்தில் தமிழகம் மேலேகாட்டியபடி பகுக்கப்பட்டிருந்ததென்பது மறுக்கமுடியாததொருசெய்தியாம். இப் பதின்மூன்றுநாடுகளையும் தமிழ்வேந்தரான சேர சோழ பாண்டியர் எவ்வாறு பகுத்து ஆண்டனரென்று ஆதாரங்கொண்டு நிலைநாட்டக்கூடிய சாதனங்கள் இதுபோழ்து கிடைத்தில. அக்காலத்தும் தொண்டைநாடென ஒன்று இல்லை யென்பதும் உறுதியானசெய்தியாம்.

நாவலர்பலராலும் நன்றுநன்றெனப் பாராட்டப்படும் பத்துப்பாட்டுக்களி லொன்றான பட்டினப்பாலை, சோழன்கரிகாலனையும் அவனது காவிரிப்பூம்பட்டினத்தையும்பற்றிக் கூறுவது. இப்பாட்டிலே கரிகாலன் தான் கருதியதுறைகளெல்லாம் பொருதுமுடித்தானாகலின்,

---

வாழும் நாடென்றும் இவர்கள் வேடுவர் என்றும் இந்நாடு பாண்டிநாட்டுக்கு வடக்கிலுள்ளதென்றும், நாகபட்டினம் அதற்குந் தலைமைப்பட்டினமென்றும் அந்நாட்டினர் பிறநாட்டினரோடு போக்குவரத்துடையரல்லரென்றுமெழுதுவர் வே. கனகசபைப்பிள்ளையவர்கள் 24. சென்னை அரசாங்கக் கல்லூரிச் சரித்திரபோதகர் வே. அரங்காசாரியர் செந்தமிழில் இராகவையங்காரால் பன்றிநாடென்பது குமரிக்குத்தெற்கிற் கடல்கொள்ளப்பட்டதாகுமெனக் காட்டப்பட்டிருக்கிறதென்றும் ஆனால் அது மதுரைக்கு வடமேற்கிலுள்ளதென்றும் கூறுவர் Madras Geo Association Journal, iii No. 2.

பலராகிய ஒளிநாட்டார்[11] தாழ்ந்து தம்வீரம் குறையவும், பழைய அருவாளநாட்டினரசருந் தாங்கள் வந்து செய்யுந்தொழிலைக் கேட்பவும், அதற்கு வடநாட்டிலுள்ள அரசர் குறையவும், அவர்நாட்டை வென்று அரசாண்டனன் என்றுகாணப்படுகிறது[12]. இவ்வடிகளில் அருவா அருவா வடதலையென்பன இன்னவிடத்திலிருந்தனவென்பது மவை தனியரசால் ஆளப்பட்டன வென்பதும் பெறுகின்றேமேயன்றி ஒளியராவார் இன்னவரென அறிதற் கேது வொன்றுமில்லை. இப்பாட்டினுள்ளும் தொண்டைநாட்டைப்பற்றிய குறிப்பு ஒன்றுங் காணப்படவில்லை. ஆயினும் இவ்வரசன் காடுகெடுத்து நாடாக்கிய செய்தியொன்று கேட்கப்படுகிறது[13]. நச்சினார்க்கினியர் இவ்வடிகட்கு, 'சோழமண்டலத்திலே காடாகிய இடங்களை வெட்டிப்போகட்டுப் பண்டுபோலக் குடியிருந்து விளையப்பண்ணி'[14] யென்று உரைவகுக்கின்றார். கடப்பைகர்நூல்ஜில்லா நாட்டுத் தஸ்தவேஜுகளில்[15] சூரியவமிசத்துக் கரிகாலமகாராஜா மேல்நாட்டை வென்றபின் இந்தநாட்டைப் பிடித்துக்கொண்டார். காரிகிரி[16] மலைத்தொடரின் தென்பாகமுள்ள காடுகளையழித்துப் பொத்தப்பியென ஒரு ஊரை உண்டாக்கினார். அவ்வூரைச்சுற்றிப் பலவூர்களுண்டாயின. இவைகட்கெல்லாம் முதலிற் பொத்தப்பி உண்டானதாகையால் அவ்வூர்களையெல்லாம் சேர்த்துப் பொத்தப்பிநாடென[17] மக்கள் வழங்கலாயினர்[18] என்று ஒரு செய்தி காணப்படுகிறது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வதிந்தவரும் சைவசந்தானஆசாரியர்களிலொருவருமான உமாபதிசிவாசாரிய அடிகள் பாடியதாகக் காணப்படும்

---

[11] ஒளியரென்பார் மற்றைமண்டலத்திற்கு அரசாதற்குரிய வேளாளரென்பர் நச்சினார்க்கினியர் (பட்டின. அடி 274 உரைக்குறிப்பு). அவ்வாறாயின் அவர்களையும் ஒரு நாட்டினராகக்கூறுவது எம்முறைபற்றியோ?

[12] " தான் முன்னிய துறை போகலிற்
பல்லொளியர் பணி பொடுங்கத்
தொல்லருவாளர் தொழில் கேட்ப
வடவர் வாட " (பட்டின. 273-277.)

[13] "காடுகொன்று நாடாக்கி" (பட்டின 283.)

[14] ஷை உரை.

[15] Local records.

[16] திருக்காரிகரை என்ற திருப்பதி மலைபின்பெயராலுண்டானதோ வென்பது கவனிக்கத்தகுந்தது.

[17] பூவலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பிநாடு. (பெரியபு. கண்ணப்ப 1)

[18] Chiristian College Magazine, January 29.

சேக்கிழார்புராணத்தில் தொண்டைநாட்டைப்பற்றிச் சொல்லுங்காலத்து நாட்டிலுள்ளோரெல்லாம் அறியும்படியாகச் 'சோழன் முன்னுளிலே குடியேற்றினது நற்குடி நாற்பத்தெண்ணாயிரம்'[19] என்று காணப்படுகிறது. இதிற் குறிக்கப்பட்டசோழன் கரிகாற்பெருவளத்தானென்றே மக்கள் எண்ணியிருந்ததாகத் தெரிகின்றது. பதினெட்டாம்நூற்றாண்டிலுண்டான சோழமண்டலசதகத்தில் 'கண்டன் கரிகா லனுக்குமுடி கவித்துக் காணி படைத்தோரும், தொண்டை நாட்டி னற்குடியாய்ச் சூழ வமைந்த தூயோரும்'[20] என்று காணப்படுவதால் இச்செய்தி வலியுறும். இன்னும் இதுபோன்ற சான்றுகள் பலவுளவாகலான் மேலே நச்சினார்க்கினியர் உரைகண்ட கரிகாலன் நாட்டிலுள்ள காடுகளை யழித்தான் என்றசெய்தி சரித்திரத்திற்கு ஒவ்வாததாகவிருக்கின்றது. இவ்வாறு கரிகாலன் காடுகெடுத்து நாடாக்கி நற்குடிநாற்பத்தெண்ணாயிரவரைக் குடியேற்றினனென்றாலும் அந்நாட்டுக்குத் தொண்டைநாடெனப் பெயரேற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறிருந்திருப்பின் பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை போன்ற நூல்களிற் குறிக்கப்பட்டிருக்கக்கூடும்.

ஆயினும், பட்டினப்பாலையைப்பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படை யென்றொருபாட்டும் பாடியுள்ளார். அதுவும் பத்துப்பாட்டினி லொன்று. அது கொடையும் வீரமும் உடையவனான கச்சியை ராசதானியாகக்கொண்டாண்ட திரையன் என்பவனிடம் சிறக்கப் பரிசில்பெற்ற பாணனொருவன் பரிசில்பெறவிரும்பிய பாணனொருவனை ஆற்றுப்படுத்தியதாகக் கூறுகின்ற பாட்டு. இப்பாட்டில், இந்தப் பெரிய நிலவுலகத்தைத் தனது அடியாலளந்தவனும் இலக்குமியாகிய மறுவை மார்பிலேயுடையவனும் கடல்போலு நிறத்தையுடையவனுமான விண்டுவின்மரபில்வந்த சோழனது குடியிற் பிறந்தோன்[21]; அக்கடலிலுண்டாகும் அலைகள் கொண்டுவந்து தந்த மரபினையுடைய அரசனது வழியிற் றோன்றியவன்[22]; இவ்விதம் அகன்ற நிலப்பரப்பிலே

---

19 "காடெங்குஞ் சோழன்முனர் தெரிந்தே யேற்று நற்குடிநாற்பத் தெண்ணாயிரத்துள்" (சே-பு. 1.)

20 செய்யுள் 29.

21 இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை (29-30).

22 ... ... ... அந்நீர்த்
திரைதரு மரபின் னுரவோ னும்பல்—(31.)

உண்டாகிய மக்களைக் காக்கின்றவர்களாகிய, முரசொலி நிரம்பிய கரி, பரி, தேர், ஆள் என்ற நான்குபடையினையுமுடைய அரசராகிய சேர சோழ பாண்டியரென்னும் மூவருள்ளும், கடலிலுண்டாகும் சங்கினங்களில் மேலாக உலகம் கூறும் வலம்புரிச்சங்கமேபோன்று மறவழியை நீக்கி அறவழியினால் அரசாளும் பலவேற்படையினையுடைய திரையன்[23] என்று பாட்டுடைத்தலைவன் கூறப்படுகின்றனன். மேலும் பகைவர்களது காவலையுடைய மதிலைவென்று, அவரது முடிகளைக் கொள்ளும் வெற்றியையல்லது சந்து செய்தலைவிரும்பினும் ஒத்துக் கொள்ளாத வலிபொருந்திப் வாளைக்கையிலேந்திய பெரிய கையினையும் பகைவர்துபொருளைக்கொள்ளுதலாகிய உணவினையுமுடைய தொண்டையோர் வழியிலுள்ளான்[24] என்றும் கூறப்படுகின்றனன். தொண்டையோர் என்பதற்குத் தொண்டையை அடையாளமாகச் சூடினோர் என்பர் நச்சினார்க்கினியர்.

இப்பாட்டினிறுதியில் தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்பாடிய பாட்டு என்று காணப்படுகிறது. ஈண்டுக் குறிக்கப்பட்டவைகளாலே சோழர்குடியைச்சார்ந்தவன், கடலினலைகளாற் கரைகொண்டுவந்துசேர்க்கப்பட்டவன், கச்சியூருடையான் ஒருவன் கச்சியைச்சார்ந்த நாடுகளை யாண்டுகொண்டிருந்தான்; அவன் தொண்டையை அடையாளமாகச் சூடினோருடைய குடியிற் பிறந்தோன் என்பது பெறப்படுகின்றது. இவன் யாரென ஆராய்வோமாயின், கடலின் திரைகளாற் கொண்டுவரப்பட்டா னென்ற முடிகட்குக் குறிப்பாக, நாகப்பட்டினத்துச்சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னிகையைப் புணர்ந்தகாலத்து அவள் யான்பெற்ற புதல்வனையென்செய்வேனென்றபொழ்து, தொண்டையை யடையாள

---

[23] மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த அறம்புரி செங்கோற்
பல்வேற்றிரையன்—(32-37.)

[24] பகைவர், கடிமதி லெறிந்து குமிழி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினு
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக—(450-454.)

மாகக்கட்டிக். கடலில்விட அவன்வந்து கரையேறின் அவற்கு யான் அரசுரிமையை யெய்துவித்து நாடாட்சிகொடுப்பலென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின் திரையனென்று பெயர்பெற்ற கதைகூறினார்[25] என்று நச்சினார்க்கினியர் கூறுஞ்செய்தி கிடைக்கின்றது. தெலுங்குக்கல்வெட்டுக்களிற் கரிகாலனுக்கு மஹிமானனென்று ஒருபுதல்வனிருந்தனனென்றும், அப்பிள்ளைக்குக் கரிகாலன், தொண்டைமான், அபிமானன் என்று மூன்று பிள்ளைகள் என்றும் ஒருசெய்தி காணப்படுகிறது அவர்களில் தொண்டைமான் ஆண்டநாடு தொண்டைநாடாகவிருத்தலும் கூடும். இவன் யாவனாயினும் இவன் அரசுரிமையைச் சோழனிடமிருந்து பெற்ற பிறகே தொண்டைநாடென அந்நாட்டிற்குப் பெயர் உண்டாயிற்று என்று கூறுதல் சாலப்பொருந்தும்.[26]

இனி, பிற்காலத்தாரொருவர் இந்நாட்டிற்கு மேற்கெல்லை பவளமலை, வடக்கெல்லை வேங்கடம், கிழக்கெல்லை கடல், தெற்கெல்லை பிநாகி[27] என்று கூறுகின்றார்.[28] பவளமலையென்று கூறப்பட்டிருப்பது மேற்குத் தொடர்ச்சிமலையாதல்வேண்டும். பிநாகியென்பது பெண்ணையாறு. இதனைக் கடியாறு என்றுங் கூறுவதாகத்தெரிகிறது. தொண்டைநாட்டையடுத்த திருமுனைப்பாடிநாட்டெல்லையைக் குறிக்கும்போது கிழக்கிற் கடற்கரையும், தெற்கில் திருஞானசம்பந்தப்பெருமானுக்கு முத்துச்சிவிகைகொடுத்ததாகக்கூறும் திருவரத்துறையும் இப்பொழுது திட்டகுடி யென்று வழங்கும் வதிட்டகுடியும் வெள்ளாறும் எல்லைகள். வடக்கிற் கடியாறு. மேற்கிற் கொல்லிமலை. இது மேற்குத் தொடர்ச்சி

---

25 பெரும்பாண் 31-வது அடிக்குறிப்பு.

26 கடியலூர் உருத்திரங்கண்ணனார் தொண்டைமா னிளந்திரையனுழைச் செல்லும் பாணனுக்கு வழிகூறுகின்றவர், தான் கண்ட பாணன் பாலைநிலத்தையும் அதனையடுத்துள்ள, குறிஞ்சி முல்லை நிலங்களையும் கடந்து கடற்கரையைச் சேர்ந்த நெய்தல்நிலத்தையும் அடைவானென்றும் ஆண்டு நீர்ப்பெயற்று என்ற பட்டினமுண்டென்றும், அதனைவிட்டுப் பெயர்ந்துசென்று பலவூர்களைக் கடந்துசென்றால், கச்சியை அடையலாமென்றும் கூறுகின்றார். இவ்வளவுசொல்லுகின்ற ஆசிரியர் ஓரிடத்தும் நாடுகள் ஒன்றும் கூறாதது கவனிக்கத்தகுந்தது.

27 பிநாகியென்பது பிநாகினியென்றிருக்கவேண்டும்.

28 மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு மூவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பிநாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு

என்பது காண்க.

மலையின்பகுதியேயாகும். தொண்டைநாட்டுக்குத் தெற்கெல்லையாகவும் திருமுனைப்பாடிநாட்டிற்குவடவெல்லையாகவும் ஓடுவது பெண்ணையாறே. ஆகவே கடியாறும் பெண்ணையாறாகல்வேண்டும். மூன்காட்டியஎல்லைக்குட்பட்ட நிலப்பரப்பைத் தொண்டைநாடெனப் புகல்வாராயினர்.

இந்நிலப்பரப்பு, தொண்டைநாடெனப் பெயர்பெறுங்காலத்திலே எவ்வாறிருந்ததெனச்சொல்லவியலாது. ஆனால், பல்லவருள் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆண்டகாலத்திலேயே பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டதாகச் செப்பேடுகளால் தெரிகிறது. அது இருபத்துநான்குகோட்டங்களாகப்பிரிக்கப்பட்டிருந்தது. பத்துப்பாட்டிலொன்றான மலைபடுகடாம் என்பது குன்றுசூழிருக்கைநாடுகிழவோனான நன்னன்மகன்நன்னன்மேற் பாடப்பெற்றது. குன்றுசூழிருக்கையென்பது பல்குன்றக்கோட்டம், என உரைகாரர் கூறினும் பாட்டில் ஆதாரமில்லாததால், சரித்திர ஆசிரியர் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

அக்காலத்திலே தமிழகம் மூற்கூறியவாறு பதின்மூன்றுநாடாகப் பிரிக்கப்படாமல் தொண்டைநாடு, சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு என்றே பகுக்கப்பட்டிருக்கவேண்டும். அவற்றுள்ளே தொண்டைநாடு, நாலாறுகோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன 1. புழல். 2. பூலியூர், 3. ஈக்காடு, 4. மணவூர், 5. செங்காடு, 6. பையூர், 7. எயில், 8. தாமல், 9. ஊற்றுக்காடு, 10. களத்தூர், 11. செம்பூர், 12. ஆமூர், 13. ஏத்தார், 14. வெண்குன்றம், 15. பல்குன்றம், 16. இளங்காடு, 17. காலியூர், 18. சிறுகரை, 19. படவூர், 20. கடிகை, 21. செந்திருகை, 22. குன்றபத்திரம், 23. வேங்கடம், 24. வேலூர் என்பனவாம். இக்கோட்டங்களுட் பல உட்பிரிவுகளுண்டு. அவற்றுக்கு நாடுகள் என்று பெயர். எழுமூர்நாடு, குன்றத்தூர்நாடு, ஆமூர்நாடு என்பன அவற்றுட் சில. இந்நாடுகளுக்குட்பட்ட பேரூர்களும் சிற்றூர்களும் ஊர்களும் பலவாம்.

இதுகாறும் கூறியவற்றான் முதலிலேயிருந்து சோழன் கரிகாற்பெருவளத்தான் ஆட்சிவரை தமிழகத்தின்பகுப்பு இவ்வாறிருந்ததென்று அறிவதற்குற்ற சாதனங்கள் கிடைத்திலவென்பதும், பின்னர்ச் சிலகாலங்கழித்தே தொண்டைநாடென ஒன்று உண்டாயிற்றென்பதும், அத்தொண்டைநாடு இருபத்துநான்குகோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்ததென்பதும் அறிகின்றோம்.

சோமசுந்தர தேசிகன்.